நிலச்சுவான்தாரி முறையை ஒழிப்போம்!

(அகில இந்திய கிஸான் சபையின் 10-வது மகாநாட்டுத் தீர்மானங்கள்)

பிரசுரிப்போர் :

தமிழ்நாடு கிஸான் சபை,

6, டேவிட்ஸன் தெரு,

ஜூன் 47] ஜி. டி., சென்னை [விலை அணு 3

அகில இந்திய கிஸான் சபை மகாநாடு

ஐக்கிய மாகாணத்தில், அலிகார் ஜில்லாவில், சிக்கந்தராவ் என்ற புராதன நகரத்தில் மே 22-லிருந்து 26-ம்தேதி வரை அகில இந்திய கிஸான் சபை மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. தோழர் காரியானந்த சர்மா தலைமை தாங்கினார். வடக்கே காஷ்மீரிலிருந்தும், தெற்கே தமிழ் நாட்டிலிருந்தும், மேற்கே சிந்துவிலிருந்தும், கிழக்கே சுர்மா பள்ளத்தாக்கிலிருந்தும்-ஒவ்வொரு தேசிய இனத் தாயகத்திலிருந்தும் சுமார் 300 பிரதிநிதிகள் வரை வந்திருந்தனர். பிரிட்டிஷ் சேவகர்களான எதேச்சாதிகாரிகளின் விலங்குகளால் பூட்டப்பட்டுக் கிடக்கும் சமஸ்தானங்களிலிருந்தும் பல பிரதிநிதிகள் பிரசன்னமாகி இருந்தார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Printed at the Janasakthi Press, Madras. Q.H.M.S. 374
Published by Tamilnad Kisan Sabha Q.H.M.S. 434
Date of Printing 18th June, 1947.

முன்னுரை

இச் சிறு பிரசுரத்தில், அகில இந்திய கிஸான் சபையின் 10-வது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமான இரண்டைத் தருகிறோம். முதல் தீர்மானம் நிலச்சுவான்தாரி முறையை ஒழிப்பதுபற்றியதாகும். இந்தப் பிரச்னையைப்பற்றி பலர் நீண்ட விவாதம் நடத்துகிறார்கள். சுருங்கக் கூறினால், பொதுமக்களுடைய கவனத்தை ஈர்த்துள்ள விஷயங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தப் பிரச்னையைப்பற்றி பலர் பல புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய புத்தகங்களைப் படித்துப் பார்த்தால் ஒரு விஷயம் தெளிவாகிறது.

அந்த ஆசிரியர்களில் பெரும்பாலோர் தாங்கள் எழுதிய விஷயங்களைக் கண்கூடாகக் கண்டு, ஆராய்ந்து அறிந்து எழுதவில்லை. பிறர் கூறக் கேட்டவற்றையும், பிறர் எழுதி வைத்துவிட்டுச் சென்ற புத்தகங்களிலிருந்து தாங்கள் அறிந்தவற்றையுமே எழுதி இருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் அந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல.

நிலச்சுவான்தாரி முறையால் கசக்கிப் பிழியப்படும் விவசாயிகள்—இக்கொடுமையினின்றும் விடுதலை பெறத் தவிக்கும் குடியானவர்கள்—ஒன்றுகூடி நீண்ட விவாதங்களுக்குப் பிறகு நிறைவேற்றிய அனுபவத்தின் மறு உருவம் இத்தீர்மானம். தாங்கள் படும் கஷ்டத்தையும், அவர்களுடைய தேவையையும், அவற்றிற்கான பரிகாரத்தையும் விவசாயிகளைத் தவிர அனுபவரீதியாகக் கூறக்கூடியவர்கள் வேறு யாரிருக்க முடியும்? ஆகவே இத் தீர்மானம் இந்த நாட்டிலுள்ள லட்சக் கணக்கான ஏழை விவசாய மக்களின் ஏகமனதான அபிப்பிராயத்தை ஒருங்கே பிரதிபலிக்கிறது.

இரண்டாவது தீர்மானம் உணவு நெருக்கடியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்தத் தீர்மானத்திற்கு காரணமும், நிறைவேற்றியவர்களும் உணவு நெருக்கடியின் கொடுமைக்கு

ஆளான ஏழைக் குடியானவர்களும், மத்தியதர விவசாயிகளும், விவசாயத் தொழிலாளிகளுமேயாவர். இவர்கள் எல்லோரும், உணவைப் பதுக்கிவைக்கும் பாதகர்களுடையவும், கள்ளமார்க் கெட் காதகர்களுடையவும், லஞ்ச அதிகாரிகளுடையவும், நட வடிக்கைகளின் பலனாக அரைப்பட்டினி கிடப்பவர்கள். நாட்டை வாட்டி வரும் கொடிய நோயாகிய உணவு நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு அவர்கள் கூறும் பரிகாரமே சாலச் சிறந்த ஔஷத மாகும்.

நிலச்சுவான்தாரி முறை ஒழிய வேண்டும் என்றும், உணவு நெருக்கடி இனி தலைதூக்காதவாறு செய்யவேண்டும் என்றும் விரும்பும் எல்லோருக்கும் இப் பிரசுரத்தைச் சிபார்சு செய் கிறோம்.

தமிழ்நாடு கிஸான் சபை

அகில இந்திய கிஸான் சபாவின்
10-வது மகாநாட்டில்
ஏற்றுக்கொள்ளப்பட்ட
தீர்மானங்கள்

....

நிலப்பிரபுத்வ ஒழிப்புப்பற்றிய தீர்மானம்

1. ஜாகீர்தாரி, ஜமீந்தாரி, மூல்குஜாரி, தாலுக்தாரி, கோடி, இனும்தாரி, ஜன்மி, பிர்வெதெரி போன்ற பல்வேறுபட்ட உருவங்களையுடைய நிலப்பிரபுத்வம், இனிமேல் நீடிக்கமுடியாது என்ற கட்டத்தை அடைந்திருக்கிறது. ரயத்வாரி நிலபாத்யதையின் கீழுள்ள வயலிலிறங்கி வேலைசெய்யாத மிராசுதாரின் நில உடமையும், நிலைக்கமுடியாதென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளெல்லாம், பட்டதெல்லாம் போதும், இனி பொறுக்கமாட்டோம் என்று நிலப்பிரபுத்வத்தைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டியவர்களாகிருர்கள். கொடிய நிலப்பிரபுத்வத்தை இனியும் பொறுக்கவேண்டுமானுல் தேசியப் பொருளாதாரத்திற்குப் பேராபத்து ஏற்பட்டே தீரும்.

2. இந்த ஏற்பாட்டை முதலில் வழக்கத்திற்குக் கொண்டு வந்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம். பலம்பொருந்திய பிரிட்டிஷ் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு ஆணிவேராக பணமூட்டை வர்க்கம் ஒன்றை இந்த ஏற்பாட்டின்மூலம் சிருஷ்டித்ததும் இந்த ஏகாதிபத்யம்தான். கிராம சமூதாயத்திலே நீண்ட நெடுங்காலமாக இருந்துவரும் ஜாதிமுறை, நாகரீக முன்னேற்றமில்லா பிற்போக்கு, வகுப்புவாதம், ஜாதி வேற்றுமை ஆகியவற்றை நீங்காது நிலைபெறச்செய்கிறது. ஜனநாயக சக்திகளின் வளர்ச்சியைத் தடுத்துத் தேய்த்துவிடுகிறது. கிராம ஜனத்தொகையில் மிகப் பெரிய பகுதியை கொடிய வறுமைநோய்க்கு ஆளாக்குகிறது.

உணவு உற்பத்தியிலீடுபடாத வர்க்கத்திற்கு உரியதாக நிலத்தை விட்டு வைத்திருப்பதனல் விவசாயச் செல்வத்தை—விளைவை—பாழாகச் செய்கிறது. இவ்வாறு மூலப்பொருள்கள் பாழாகும் படிச் செய்வதுமூலம், பலமடங்கு அதிகமாகப் பலனளிக்கவல்ல இக்கால தொழிற்சாலைகளின் பெருக்கத்திற்கு குந்தகம் ஏற்படு கிறது. இந்த நிலபாத்யதை ஏற்பாட்டினுல், விவசாயச் சீரழிவே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. உணவு உற்பத்தி படிப்படியாகக் குறைந்துகொண்டே போகிறது. பெரும்பாலான நிலங்களுக்குச் சொந்தக்காரர்களான நிலப்பிரபுக்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியையாகிலும் விளைவை அதிகரிப்பதற்கென்று செலவு செய்யாதிருப்பதனுலேயே இந்த நிலைமை சிருஷ்டிக்கப்பட்டுள்ளது.

3. விளைநிலங்களில் பெரும்பகுதிக்கு உரிமை உடையவர்களாகவும், பிறரைக்கொண்டு உழுவித்து உண்பவர்களாகவும் உள்ள ஒரு வர்க்கத்தை பல்வேறு உருவங்களிலுமுள்ள நிலப்பிரபுத்வமுறையே சிருஷ்டித்திருக்கிறது. இந்த வர்க்கம், உற்பத்தியைப் பெருக்குவதறகு செலவு விஷயத்தில் சுண்டுவிரலைக் கூட அசைப்பதில்லை. உயிர்வாழ்வதற்குத் தேவையான குறைந்த பட்ச வருமானங்கூடக் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருக்கும் உழவர்கள்மீது, தாங்கமுடியாத கடன் பாரத்தைச் சுமத்துகிறது இவ்வர்க்கம். தங்களுடைய பிடியில் நிலம், உணவு இரண்டையும் சுவாதீனப்படுத்திவைத்துக்கொள்வதன்மூலம், திரும்பத் திரும்ப வரும் பஞ்சத்தைத் தடுக்கமுடியாதவாறு செய்யும் ஒரு வர்க்கத்திடம் நிலத்தை மாற்றுகிறது. இந்த வர்க்கம் நிலத்திலிறங்கி வேலை செய்வதில்லை. பிறரை உழச்செய்து பலனைமாத்திரம் அனுபவிக்கிறது. யுத்தகாலத்தில் நிரந்தரமாக விளங்கிய உணவு நெருக்கடி, நாட்டைப் பாழாக்கிய 1943-ம் ஆண்டு பஞ்சம், உணவு உற்பத்திப்பெருக்கு இயக்கம், சர்க்காரின் உணவுக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் பொருட்படுத்தாது நாளுக்குநாள் பெருகிவரும் உணவுப்பஞ்சம் ஆகியவை திரையை விலக்கி, ஒரு விஷயத்தைத் தெளிவாக்குகின்றன. நெடுநாட்களுக்கு முன்பு 'ஹைதர்காலத்தில்' ஏற்பட்ட உளுத்துக் கலகலத்துப்போன நில ஏற்பாட்டின் பலனுகை வெகு வேகத்தில், நம் நாட்டு விவசாயப் பொருளாதாரம் சீர்குலைந்துவருகிறது.

5. நிலச்சுவான்கள் தங்களிடம் நிலச்சாகுபடி செய்யும் குடியானவர்களை பெரிய அளவில் வெளியேற்றி முடிந்த அளவு

நிலத்தைத் தங்கள் வசம் வைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய இத்தகைய நடவடிக்கை உணவு நெருக்கடியைக் கடுமையாக்குகிறது. சாதாரண காலங்களில் கிடைப்பதைப் போல் பலமடங்கு விலைக்கு விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதிக்கலாம் என்று உணவு தான்ய விளைவு முழுவதையும் தங்களுக்கே கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்ற நோக்கத்தினால்தான், அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். உப குத்தகைக்கு விடும் ஏற்பாடு ஒழிப்பு, சட்டரீதியான நிலப்பிரபுத்வத்தை நஷ்டஈடு கொடுத்து எடுத்துக்கொள்வதுபோன்ற சட்ட நடவடிக்கை வரும் என்று எதிர்பார்த்தும் இவ்வாறு செய்கிறார்கள். மிகச்சிறிய துண்டு நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாய் இருக்கும் ஏழை விவசாயிகளுடைய நிலங்களைப் பிடுங்கிக்கொண்டு அவர்களை அந்தரத்தில் விடுவதில் நிலச்சுவான்தார்கள் வெற்றிபெறுவார்களேயானால், விவசாயப் பொருளாதாரம் முழுவதும் சொச்ச மிச்ச மெதுவுமின்றி பிறரை உழச்செய்து ஏமாற்றிப் பிழைக்கும் உணவைப் பதுக்கிவைக்கும் பாதகனின் இரும்புப்பிடியில் அகப்பட்டு நொறுங்கநேரிடும். அவர்களுடைய தாக்குதலின் காரணமாக முன்னைவிட அதிகமாக உணவுநெருக்கடி பெருகும்.

6. நாடு முழுவதும், நோக்குமிடமெல்லாம் தூண்டுவார் எவருமின்றி, தானாகவே வெடித்தெழும் விவசாயி மக்களின் போராட்டங்கள், நிலப்பிரபுத்வத்தை இனிப் பொறுக்க முடியாது என்ற மக்களின் ஏகோபித்த முடிவை எடுத்துக்காட்டுகின்றன. மொத்த விளைவில் மூன்றிலிரண்டு பங்கு வாரமாக விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டுமென்று கோரிய வங்காளத்தில் மகத்தான தெபாகா இயக்கம் நடந்தது. குடிவார பாத்யதை சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கோரி ஐக்கிய மாகாணத்திலும், பீகாரிலும் விவசாயப் போராட்டங்கள் நடந்தன. அதள பாதாளத்தில் கிடந்த விவசாயிகள் நல்வாழ்வு கோரி, ஆந்திர தேசத்திலும், தமிழகத்திலும், சுர்மா பள்ளத்தாக்கிலும் எழுச்சிபெற்று கிளர்ச்சி செய்கிறார்கள். ஜீவனச் சம்பளத்திற்காகவும், வேலையைவிட்டு, நினைத்ததும் விரட்டும் நிலச்சுவான்களின் கொடுமையையும், ஏழைகளை ஒடுக்க எடுத்துக்கொள்ளப்படும் அடக்குமுறைகளையும் எதிர்த்து வேலைநிறுத்தம் செய்கிறார்கள், ஆந்திர தேசத்திலும், தமிழகத்திலும், சுர்மா பள்ளத்தாக்கிலும், பாட்டியாலாவிலுமுள்ள விவசாயத் தொழிலாளிகள். நில அடிமைத்தனத்தையும், பண்ணை அடிமை முறையையும் எதிர்த்து, சுதேச சமஸ்தானங்களிலே கிளர்ச்சி வலுத்து விவசாய

அமைதியின்மை நிலவி வருகிறது. இவை அனைத்தும் சந்தேகத்திற் கிடமின்றி தெளிவாக்குவதென்ன? கிராமப் பொருளாதாரம் தகர்ந்து சீர்குலைந்துவருவதற்கு தலையாய காரணமாக, இன்று அமுலில் இருந்துவரும் நில பாத்யதை முறைகளை இனி ஒரு கணம்கூடப் பொறுக்கமுடியாது என்பதை கிராம விவசாயிகள் உணர்ந்து செயலில் இறங்குவதேயாகும். இந்த வீரப்போராட்டங்களின்மூலம் ஏழை விவசாயிகள் உணவைப் பதுக்கி, நிலத்தைச் சேமித்து வைக்கும் கள்ளச்சேமிப்பாளர்களை எதிர்த்து நிற்கிறார்கள்.

கண்ணில் மண்ணைத்தூவி தங்களுடைய உழைப்பின் பலனை அபகரிக்கும், தன்னிஷ்டப்படி நிலத்திலிருந்து கல்த்தா கொடுக்கும் முறையும் ஒழியவேண்டுமென்று கோருகிறார்கள். நடைமுறையில் கண்முன் வெந்துயரத்தின் எதிரொலியாய்க் கொதித்தெழும் புரட்சி, பழங்கால முறையை ஒழிக்க முடியுமென்ற நம்பிக்கையை விவசாயிக்கு ஊட்டுகிறது. பணமூட்டைகளின் பலத்தையும், எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் விவசாயி கிளர்ந்தெழுகிறான். இப்போராட்டங்கள், விவசாய பொருளாதாரத்தை ஜனநாயக சக்திகளின் கண்காணிப்பில் கொண்டு சேர்க்கும் சக்தியை வளர்க்கின்றன. இப்போராட்டங்களில் ஏற்படும் வெற்றி, பிரிட்டிஷ் ஆட்சியை சுக்கல் சுக்கலாகத் தகர்த்து எறியும் சக்திகளை பலப்படுத்துகிறது; இந்தியா முழுவதிலும் சுதந்திர ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டும்.

7. இந்த சம்பிரதாயம் பிரிட்டிஷ் ஆட்சியால் உண்டாக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி தகர்க்கப்படும்பொழுது அதன் சிருஷ்டியான இந்த நிலப்பிரபுத்வ முறையும் வேரோடு கெல்லி எரியப்பட வேண்டும். எந்தவிதமான நஷ்டஈடுமின்றி எல்லா உருவங்களிலும் உள்ள நிலப்பிரபுத்துவ முறையை ஒழிக்கவேண்டும் என்பது அகில இந்திய கிஸான்சபையின் குறிக்கோள். நஷ்டஈடு கொடுப்பது ஏற்கனவே அதிகவரியால் கஷ்டப்படும் மக்கள்மீது இன்னும் தாங்கமுடியாத பாரத்தைமறைமுகமாகச் சுமத்துவதாகும். தேசீயப் புனர்நிர்மாணத்திற்கு இன்றியமையாத தேசத்தின் உற்பத்தி ஸ்தானத்தை வரளும்படிச் செய்வதாகும். நஷ்டஈடுபெற நிலச்சுவான்தார்களுக்கு தார்மீக உரிமை அறவே கிடையாது. ஏழைகளைக் கொடுமைக்கும், வெந்துயருக்கும் ஆளாக்கி, தேவையான அளவு சொத்துக்களைச் சேமித்து வைத்திருப்பதனால்தான், அவர்களுக்கு நஷ்டஈடு என்று பேசக்கூட உரிமை கிடையாது என்று

கூறுகிறோம். நிலச் சொந்தக்காரர்களின் கூட்டத்தில் நிலச்சுவான்தாரி முறை ஒழிக்கப்பட்டவுடனேயே ஜீவனத்திற்கு வழியின்றித் தவிக்கவேண்டிய நிலைமையில் உள்ள சிறிய இடைத்தட்டுக்காரர்கள் பெரும்பாலாக இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்பதையும் அகில இந்திய கிஸான் சபை உணருகிறது. வாழ்க்கை நடத்துவதற்கு வழியற்ற நிலச்சுவான்களுக்கு சர்க்கார் நிலவருமானத்திலிருந்து ஆண்டுக்கு ரூ. 500 அதிகபட்சம் கிடைக்கும்படிச் செய்து 10 வருட காலத்திற்கு புனரமைப்பு நிவாரணம் அளிக்கவேண்டும் என்று கிஸான் சபை அபிப்பிராயப்படுகிறது.

8. நிலப்பிரபுத்துவத்தை ஒழித்ததும், முதலில் விவசாயத்திற்கான நிலம் முழுவதையும் சர்க்காருடைய சொத்து என்று பிரகடனப்படுத்தவேண்டும். பிறகு நிலத்தை உழுது சாகுபடி செய்யும் விவசாயிக்கு எப்பொழுதும் சொந்த சொத்தாக இருக்கும்படி பிரித்து வினியோகிக்க வேண்டும். எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைச் சம்பளம் கிடைக்கவேண்டும். மற்ற குடியானவர்களுக்கு நேரடியாக விவசாயம் செய்வதற்கு வேண்டிய குறைந்தபட்ச நில சொந்த உரிமை வேண்டும். தரிசு நிலங்கள் முழுவதையும் ஏழை விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வினியோகிக்கவேண்டும். எந்த உருவத்திலாகிலும் நிலத்தை உபகுத்தகைக்கு விடுவது அனுமதிக்கப்படக் கூடாது. சர்க்கார் தலையீட்டின் பேரிலன்றி விரும்பியவாறு நில விற்பனை கூடாது.

9. தானே உழுது பயிரிடுவதற்குத் தேவையான நிலத்தை விட மிகுதியாக உள்ளது முழுவதையும் சர்க்கார் எடுத்துக் கொண்டு ஏழை குத்தகைதார்களுக்கு அவற்றை வினியோகிக்க வேண்டும். இதனல் வாழ்க்கைக்குப் போதிய வருவாயுள்ள சிறு நிலக்காரர்களின் எண்ணிக்கையை முடிந்த அளவு பெருக்க முயற்சிக்க வேண்டும். உயர்ந்த பட்சம் எவ்வளவு என்பதை நிர்ணயிக்கும்போது இரண்டு விஷயங்களை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். 1. வாழ்க்கைக்குப் போதிய வருமானம் அளிக்கக்கூடிய சிறு நிலச் சொந்தக்காரர்களுடைய எண்ணிக்கை முடிந்த அளவு அதிகரிக்கப்பட வேண்டும். 2. தானகவே பயிரிடும் மத்தியதர விவசாயிகளுடைய நிலங்களைப் பறிமுதல் செய்யக்கூடாது. இந்த இரண்டு விஷயங்களையும் கருத்தில் கொண்டு அதிகபட்ச நிலநிர்ணயம் ஏற்படுமேயானல், விரை

வில் நிலப்பிரபுத்வம் ஒழியும், உழவர்களுக்கு நிலம் வினியோகிக்கப்படும், இன்பமும் சுபிட்சமும் தவமும், விவசாயப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும், கிராம சமூதாயத்தில் ஜனநாயகம் பிறக்கும் என்ற நம்பிக்கை போராடும் விவசாயிக்கு உண்டாகும். இத்தகைய அதிகபட்ச அளவு வெவ்வேறு மாகாணங்களில் வெவ்வேறு விதமாக நிர்ணயிக்கப்பட நேரிடும். நிலத்தின் அளவு, மத்தியதர விவசாயிகளின் நிலைமை, ஏழைக் குடியானவர்களின் வாழ்க்கைத்தரம் இவற்றைப் பொறுத்துத்தான் அதிகபட்ச நில நிர்ணயம் நடக்கவேண்டும். உதாரணமாக வங்காளம், பீகார், மலபார், ஐக்கியமாகாணம், சுர்மா பள்ளத்தாக்கு முதலிய இடங்களில் ஜமீன்தாரி முறையின் கீழ் நிலம் பல பெரிய கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தும் மத்தியதர விவசாயிகளுக்குப் போதுமான நிலம் கிடைக்காமல் கஷ்டம் ஏற்படுகிறது. இங்கெல்லாம் ஒரு மத்திய குடும்பத்திற்கு அதிகபட்சமாக 25 ஏக்கர் இருக்கவேண்டும். ஆந்திர தேசம், பாஞ்சாலம் போன்ற வாய்க்கால் வளத்தினலும் வண்டல் மண்ணினலும் செந்நெல் கொழிக்கும் பிரதேசங்களில் உள்ள மத்தியதர விவசாயிகளும், சொத்துள்ள விவசாயிகளும் 50 ஏக்கர் வரை சொந்த நஞ்சை நிலம் வைத்திருக்கிருர்கள். அந்தநிலத்தைத் தாங்களே உழுது பயிரிடுகிருர்கள். சிலர் கூலிக்கு ஆளமர்த்தி நிலச்சாகுபடி நடத்துகிருர்கள். இவ்விடங்களில் அதிகபட்ச நில நிர்ணயம் நஞ்சையாக இருந்தால் 50 ஏக்கரும், புஞ்சையானல் 100 ஏக்கரும் என்றிருக்க வேண்டும். மாகாண கிசான் சபைகள் பிரதேசங்களுக்குத் தக்கவாறும் மாகாணத்திற்கு ஏற்றவாறும் அதிகபட்ச நில அளவு நிர்ணயம் பற்றி முடிவு செய்யும்.

10. நிலத்தைத் தாங்களே உழுபவர்களுக்கு எப்பொழுதுமே சொந்தச் சொத்தாக இருக்கும்படி நிலம் கிடைக்கவேண்டும். தாங்களே சொந்தத்தில் பயிரிடுவதாக விரும்பினல் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அளவு நிலம் கொடுக்க வேண்டும். நில முறையில் தீவிர மாறுதல் ஏற்படுவதற்கான அதிகப்படியான ஒற்றுமையும், ஒத்துழைப்பும், ஆதரவும் திரட்ட வேண்டுமென்ற எண்ணத்தினலேயே இந்த முடிவிற்கு வருகிருேம். ஒரு குத்தகைதாரனிடம் தன் நிலத்தை பயிர் செய்ய விட்டுவைத்திருக்கும் நிலச்சுவான், தானே பயிர் செய்ய விரும்பும் காலத்தில் குத்தகைதாரனை வெளியேற்ற முடியுமா? அப்படியானல் குத்தகைதாரனுடைய கதி என்னவாகும்? உண்மையிலேயே ஒன்றுக்கொன்று விரோதமான கருத்துக்களை உடைய உரிமை பாராட்டு

தல்களை இது தன்னத்தே உடையதாய் இருக்கிறது. இன்றுள்ள நிலைமையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையின் கீழ் ஏற்படும் புதிய நில வினியோகத்தில் இந்த கஷ்ட நிலைமை தீர்த்து வைக்கப்படும். உதாரணமாக புதிய பொருளாதாரத் திட்டம் ஏற்பட்டால் ஏழைக் குடியானவர்களுக்கு வேலைக்கு வழிபிறக்கும். சிறு நிலக்காரர்களுக்கு, புனர்நிர்மாண வேலைகளைச் செய்வதில் ஒழுங்கான வாழ்க்கை நடத்துவதற்கான வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டாகும். அந்த நிபந்தனையின்கீழ் சிற்சில சமயங்களில் தானே விவசாயம் செய்வதற்கென்று குத்தகைதார்களை வெளியேற்றலாம்; சில சமயங்களில் குத்தகைதார்களை வெளியேற்ற முடியாது. குத்தகைதார் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டால் அவன் உழுத தண்டு நிலத்திற்கு பூமு நஷ்டஈடு கிடைக்கவேண்டும். குத்தகைதாரனே அதை எப்பொழுதும் வைத்துக்கொள்வதாய் இருந்தால் நிலச் சொந்தக்காரனுக்கு பூமு நஷ்டஈடும் தரப்படவேண்டும். இப்பிரச்னையைத் தீர்க்க வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு நடவடிக்கைகள் அவசியமாகும். நில வினியோகம் ஏற்படுவதற்குள் இன்றைய நிலைமையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்படும். ஆகவே இப்பொழுது நிரந்தரமாகவும் நிச்சயமாகவும் ஒரு முடிவு எடுக்க முடியாது. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நில கமிட்டிகள் ஜனநாயக வழிகளையே பின்பற்றி இப்பிரச்னைகளைத் தீர்க்கும். இன்று குடிவார பாத்யதை உடைய விவசாயிக்கு நாளைக்கு நில பாத்யதை இல்லாது போய்விடுமோ என்ற சந்தேகம் ஏற்படுவது இயற்கை. அதிகபட்சமாக எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த அளவுவரை நிலம் சொந்தத்தில் வைத்துக்கொள்ள உரிமை உண்டு என்பதற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. தன்னுடைய நிலத்தை குத்தகைக்கோ, வாரத்திற்கோ பிறரிடம் விட்டு வைத்திருக்கும் நிலச்சுவான்தார் சொந்தத்திலேயே விவசாயம் செய்ய விரும்பினால்—அந்தக் குத்தகைதாருக்கு சம்பாதிக்க வேறு வழியிருந்தால்—குத்தகைதாரரிடமுள்ள நிலத்தைத் தானே எடுத்துக்கொள்ள உரிமை உண்டு என்று உத்தரவாதமளிக்கப்படுகிறது. இத்தகைய உரிமைப் பாராட்டுதலையும், இவ்வாறு பாராட்டப்படும் உரிமையை எதிர்த்துச் சொந்தம் கொண்டாடுவதையும் இறுதியாக முடிவு செய்யவோ, பரஸ்பரம் ஒத்துப் போகும்படியோ செய்ய நிலக் கமிட்டி சமரஸம் செய்துவைப்பதன் மூலமோ தீர்ப்பளிப்பதன் வாயிலாகவோ முயற்சிக்கும்.

11. இப்பொழுது அமுலிலிருக்கும் நிலவரித் தீர்வை ஏற்பாட்டை நீக்கவேண்டும். அதற்கு பதிலாக விவசாய வருமானத்திற்குத் தக்க வரிவிதிக்க வேண்டும். குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வரிவிதிப்பினின்றும் விதிவிலக்கு வேண்டும்.

12. இந்த நாட்டை வாட்டிப் பிழிந்த ஏகாதிபத்திய ஆட்சியின்பலனாய் உண்டாக்கப்பட்ட தேசியப் பொருளாதார நெருக்கடியை என்றென்றும் தலைகிளப்ப முடியாதவாறு அடியோடு ஒழிப்பதற்கு, உழுபவனுக்கே நிலம் என்ற உறுதிமொழியளிக்கும் முழுவதும் தேசிய மயமான புனர்நிர்மாணத் திட்டம் மிகமிக அவசியம் என்று அகில இந்திய கிஸான் சபை அபிப்பிராயப்படுகிறது.

தேசிய நெருக்கடியை அடியோடு ஒழிப்பதற்கான முற்போக்கு ஜனநாயகப் பாதை இதுதான் என்று அ. இ. கி சபை நன்கு உணருகிறது ஸ்தாபனரீதியாகத் திரட்டப்பட்ட, நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட அரும்பாடு படும் விவசாயிகளும் கிராமத் தொழிலாளிவர்க்கமும், தொழிற்சாலைகளில் அல்லும் பகலும் வேலைசெய்யும் தொழிலாளி வர்க்கமும் முற்போக்குள்ள படித்த இனத்துடன் கைகோர்த்து தேசீய முன்னணியில் முக்கிய ஸ்தானம் வகிப்பதிலே வெற்றிபெறுதல்தான், இத்திட்டத்தைச் செயலில் கொண்டுவர இயலும். ஆகவே அ இ சபை தன்னுடைய கிளை ஸ்தாபனங்களைக் கீழ்க்கண்ட இயக்கத்தை மிகப் பெரிய அளவில் நடத்தவேண்டுமென்று அறைகூவி அழைக்கிறது.

● உழுபவனுக்கே நிலம் என்ற பொதுவான கோரிக்கை, சகல பகுதியினருடைய கவனத்தையும் ஈர்த்து பலமடையும்படி செய்ய தொடர்ந்து வேலைசெய்ய வேண்டும்.

● நமது தேசியப் பொருளாதாரப் புனர்நிர்மாணம் அதிதீவிரமாக நடைபெற வேண்டுமென்பதற்குப் பக்கபலமாக ஜனநாயக—ஏகாதிபத்ய எதிர்ப்பு சக்திகளுடைய ஆதரவைப் பெற வேண்டும்.

● விவசாயிகள் எல்லோரையும் கிஸான் சபையின் பின் திரண்டு நிற்கும்படிச் செய்யவேண்டும்.

இரண்டாவது பகுதி

வெவ்வேறு மாகாணங்களில், பொதுஜன மந்திரி சபைகள் நிலச்சுவான்தாரி முறையை ஒழிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளைத் தயாரித்திருக்கின்றன, அல்லது பலவிதமாக ஆலோசனை செய்து வருகின்றன. நில ஏற்பாட்டில் மாறுதல் ஏற்படும் என்று இனியும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது என்பதை மந்திரிசபை வெளிப்படையாக அங்கீகரிக்கிறது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. நாடு முழுவதும் கடலலைபோல் ஆர்த்தெழும் விவசாய மக்களின் போராட்ட இயக்கம், பொதுஜன மந்திரி சபைகள் நிலச்சுவான்தாரி முறையை ஒழிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தும். எந்தவிதமான தீவிர மாறுதல்களும் வரக்கூடாது என்றும், மீறி வந்தேதீரும் என்ற நிலைமையேற்பட்டால், அதைக் காலதாமதம் செய்வதற்காகவும் நிலச்சுவான்தார்களும், அதிகார வர்க்கத்தினரும் நிர்ப்பந்தம் கொண்டுவந்து முட்டுக்கட்டை போட முயற்சிக்கிறார்கள். இது போன்ற காலதாமதம் ஏற்பட்டால் எத்தகைய பேராபத்து விளையும் என்பதை எடுத்துக்காட்டும் குறிமுள்ளாக விளங்குகிறது, இன்று பார்க்கும் இடமெல்லாம் கொதித்தெழும் விவசாயிகளின் கிளர்ச்சி, எல்லா மாகாணங்களிலும் நிலச்சுவான்தாரி முறை ஒழிப்புச் சட்டம் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும என்றும், 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நிலச்சுவான்தாரி முறையை நொறுக்கி எறிய, முடிந்த அளவு வேகமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அ. இ. கி. சபை கோரிக்கை விடுக்கிறது. அ. இ. கி. சபை உழுபவனுக்கே நிலம் என்ற பொதுவான கோரிக்கைகளின் அடிப்படையில், எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கையையும் தராசிலிட்டு நிறுப்பதுபோல் அளவிடும். வங்காளத்தையும் பீஹாரையும் தவிர, வேறு எந்த மாகாணத்திலும் நிலச்சுவான்தாரி முறையை ஒழிப்பதற்கு பொதுஜன மந்திரி சபைகள் இன்னும் மசோதாக்கள் தயாரிக்கவில்லை என்பதைக் கண்டு வருந்துகிறது. வங்காளத்திலும் பீகாரிலும் சட்டமாக்குவதற்காக ஆலோசனையிலிருந்துவரும் மசோதாக்களும்கூட, நடைமுறையில் வருவதற்கு ரொம்பநாள் பிடிக்கக்கூடியவையாகவே இருக்கின்றன. இது உணவு நெருக்கடியை வலுக்கச்

செய்கிறது; நிலச்சுவான்களை பலப்படுத்துகிறது; இந்த மசோதாவினுடைய முக்கிய நோக்கத்தையே வீழ்ச்சியுறச் செய்கிறது. சட்டம் ஏற்படுத்துவதைத் துரிதப்படுத்த வேண்டுமென்றும், சட்டத்தின் திட்டங்களை இந்த ஆண்டே அனுபவத்தில் கொண்டுவர வேண்டும் என்றும் ஒன்றுபட்ட பொதுஜன நிர்ப்பந்தம் சர்க்காரை வற்புறுத்தும்படிச் செய்ய வேண்டுமென்று அ. இ. கி. சபை பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. வங்காளத்திலும், பீகாரிலும் உத்தேசத்திலுள்ள திட்டங்கள், பொதுஜன மந்திரிகளுடைய மூளை எவ்வாறு வேலை செய்கிறது என்பதையும், பணமூட்டைகளுடைய பிடி இன்னும் தளர்ந்தபாடில்லை என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன. பெரிய அளவில் நஷ்டஈடு தர அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். தேசியப் பொருளாதாரம், இப்பெரிய சுமையை மேலும் பொறுக்க முடியாத நிலையிலிருக்கிறது. சட்டரீதியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலச்சுவான்தார்களின் சொத்துக்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளுவது என்று மாத்திரம் திட்டமிட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் உள்ள, விரும்பியவர்களிடம் வேலைசெய்யும் குடியானவர்களைப்போன்ற உண்மையாக உழுது பயிரிடும் விவசாயிகளுக்கு நிலபாத்யதை உரிமை கிடைக்குமென்ற உத்திரவாதம் கூட அளிக்கப்படவில்லை. தற்கால தீர்வை முறையில் அவர்கள் மாறுதல் செய்யவில்லை. தீர்வையைக் குறைப்பதுபற்றி அவர்களுக்கு யோசனை இல்லை. அவர்கள் கருதியுள்ள சீர்திருத்த ஆலோசனைகளைக்கூட நடைமுறையில் கொண்டுவருவதற்கு காலதாமதம் ஏற்படக்கூடிய வழிமுறைகளையே அனுசரிக்க விரும்புகிறார்கள். பழங்காலத்தில் ஏற்பட்ட நிலப்பிரபுத்வமுறையைச் சுக்கலாக நொறுக்கி எறியவும், நெற்றி வியர்வை சொட்டச் சொட்ட நடுவயலில் நின்று வேலைசெய்யும் உழவனுக்கு நிலம் கிடைக்கும்படியான புதிய நிலவினியோகத்திற்கான வழியைச் செப்பனிட்டு, சுத்தம் செய்யவும் சர்வஜனப் பகுதியினரும் ஒன்றுபட்டுப் போராட முன்வரவேண்டும். அப்பொழுதுதான் நிலச்சுவான்தார்களின் இரும்புப்பிடியில் சிக்குண்டு கிடக்கும் நிலபாத்யதையும், சட்டமும் விவசாயிகளுக்கே உரியதாகும்படிச் செய்யமுடியும்.

ஆகவே கீழ்க்கண்ட தத்துவங்களின் அடிப்படையில் தங்களுடைய சட்டங்களை அமைக்கவேண்டுமென்று அ. இ. கிஸான் சபை எல்லா மாகாணங்களிலுமுள்ள பொதுஜன மந்திரிசபை

களை வற்புறுத்துகிறது. விவசாயிகளை பலப்படுத்தி, நிலச்சுவான்களை பலஹீனப்படுத்த நிலச்சுவான்தாரிமுறையை ஒழிப்பதில் வெற்றிபெறுவதற்கான குறைந்தபட்சத் தேவையான நடவடிக்கைகள் இவையே :

● பெரிய நிலச்சுவான்தார்களுக்கு நஷ்டஈடு கொடுக்கக்கூடாது. மற்றவர்களுக்கு அளிக்கப்படும் நஷ்டஈடும் ரொம்பக் குறைவான தொகையாகவே இருக்கவேண்டும்.

● நிலச்சுவான்தார், தானே சொந்தத்தில் விவசாயம் செய்வதாக இருந்தால், அவருக்குச் சொந்தமான குத்காஸ்த், ஸர், பகாஷ்த் அல்லது வீட்டைச் சுற்றியுள்ள பண்ணை நிலத்திலிருந்து 25 முதல் 50 ஏக்கர்வரையில் அனுமதிக்கலாம்.

● எல்லாவகையான குத்தகைதாரர்களுக்கும், வாரதார்களுக்கும் நில பாத்யதை நிரந்தரமாக உண்டு என்ற உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

● சர்க்கார்மூலமாகத் தவிர நிலத்தைப் பிறருக்கு மாற்றவோ, விற்கவோ யாருக்கும் உரிமை இருக்கக்கூடாது.

குடியானவர்களுக்குப் போதிய நிவாரணமளிப்பதை அஸ்திவாரமாக உடைய நடவடிக்கைகளை உடனடியாக சட்டமாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று பொதுஜன மந்திரிகளை கிஸான் சபா மேலும் வற்புறுத்துகிறது. கொண்டுவரவிருக்கும் சட்டம், அமுலுக்கு வருவதற்குள்ள இடைக்காலத்தில், சட்டத்தினுடைய திட்டத்தையே குட்டிச்சுவரடிக்கவேண்டுமென்று முயற்சிக்கும் நிலப்பிரபுக்களுடைய 'தில்லுமுல்லு திருகுதாளத்தை'ப் புறமுதுகிடச் செய்யவேண்டும்.

● நில குத்தகையை போதிய அளவு குறைக்கவேண்டும்.

● குத்தகைத் தொகை, தானியமாகக் கொடுப்பதற்கு பதிலாக ரொக்கமாகக் கொடுக்க உரிமைவேண்டும்.

● வாரதார்களுக்கு வாரமாக மொத்த விளைவில் மூன்றிலிரண்டுபாகம் குறைந்தபட்சம் கிடைக்கவேண்டும்.

● விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் தரிசுநிலங்கள் முழுவதையும் விநியோகிக்கவேண்டும்.

V211,934 (X723)

● நில பாத்யதை நிர்ணயம் வேண்டும்.

● விவசாயத் தொழிலாளிகளுக்கு குறைந்தபட்ச வாழ்க்கைச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

● பொதுஜன மந்திரிசபைகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து விவசாயிகளை வெளி யேற்றியதைச் சட்ட விரோதமாக்க வேண்டும்.

● விவசாயிகளுக்கு பாதகமாக உள்ள "டிக்ரி"களையும் வழக்குகளையும் தள்ளுபடிசெய்யவேண்டும். குத்தகையில் ஏற்பட்ட உயர்வையும் தள்ளுபடிசெய்யவேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் பதவி ஏற்றபிறகு ஜமீன்தார்களால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் ஊருக்குப் பொதுநிலங்களை மறுபடி கைவிடும்படிச் செய்ய வேண்டும். இந்த விவகாரம் பூராவும் ரத்துசெய்யப்பட்டதாகவும் பிரகடனம் செய்யவேண்டும். இந்த உருப்படியான நடவடிக்கையெல்லாம் நிலச்சுவான்களை பலஹீனப்படுத்தும் என்ற விஷயத்தை விவசாயிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவர கிஸான் சபா விரும்புகிறது. விவசாயிகளை பலப்படுத்தும். உழவர்களுக்கு நிலவினியோகம் செய்வதில் வெற்றிபெறுவதற்கு ஆதரவான சூழ்நிலையை சிருஷ்டிக்கும். ஆகவே கிஸான் சபா தன்னுடைய கிளை ஸ்தாபனங்களுக்கு, உடனடியான இடைக்கால கோரிக்கைகளை அடைவதற்காக எல்லா முயற்சிகளையும் ஒருமுனைப்படுத்தவேண்டுமென்று, வேண்டுகோள் விடுக்கிறது. இந்த கோரிக்கைகள் விவசாயிகளுக்கு உடனடியான நிவாரணமளிக்கும். நிலச்சுவான்தார்களுடைய பலத்தைப் பெரிதும் பாதிக்கும். இந்த நாட்டிலுள்ள விவசாயிகளல்லாத ஜனநாயகவாதிகளுடைய மனப்பூர்வமான ஆதரவை சுலபமாகப் பெறும். கிஸான் சபா விவசாய மக்கள் எல்லோரையும் ஒன்றுக ஸ்தாபன ரீதியாகத் திரட்டி, முற்போக்குவாதிகளோடு சேர்ந்து பொதுஜன மந்திரிசபைகளை, தங்களுடைய குறைகளைப் போக்கவேண்டுமென்று நிர்ப்பந்தித்தால்தான், நியாயமான நிலபாத்யதைச் சட்டம் இயற்றப்படும் என்று விவசாயிகளை எச்சரிக்கிறது. கிளர்ச்சி எதுவுமின்றி விவசாயிகள் சட்டம் வரும் என்று' எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களேயானல், நிலச்சுவான்தாரி ஒழிப்பு சட்டம் இன்னும் காலந்தாழ்த்தப்படும். அப்படி நிறைவேற்றப்பட்டாலும் அந்தச் சட்டம் நிலச்சுவான்களுக்கு வால்பிடிக்கக்கூடியதாகவேதான் இருக்கும்.

நிலைமை நெருக்கடி மிகுந்ததாயும், மேலும் பொறுக்கமுடியாததாயும் இருக்கிறது. நிலச்சுவான்தாரி சட்டத்தை முறியடிக்க வேண்டுமென்ற ஜமீந்தார்களுடைய முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

1. அவர்களுடைய கோரிக்கைகளுக்காக மகத்தான கிளர்ச்சியை முழு மூச்சுடன் ஆரம்பிக்கவேண்டும்.

2. எல்லா விவசாயி மக்களையும் ஆர்த்து எழச் செய்ய வேண்டும்.

3. அவர்களுக்கு ஆதரவாக தேசபக்தியுள்ள மக்களை திரட்டவேண்டும்.

தீர்மானம்: உணவுப் பிரச்சினை

1943-ம் வருடத்தில் கோர சொரூபமெடுத்ததே போல இன்று நாட்டில் உணவு நெருக்கடி முற்றிவருவதை அகில இந்திய கிஸான் சபை கலக்கத்துடன் கவனிக்கிறது. இடைக்கால சர்க்கார் உணவு அங்கத்தினர் ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் கொஞ்ச நாளைக்கு முன்னர் ஒரு விஷயத்தை உடைத்துச் சொன்னர்: மத்திய சர்க்காரிடம் கையிருப்பாயுள்ள உணவு ஸ்டாக்குகள் மிகக் குறைவாய் விட்டதால் பங்கீடு அளவில் 4 அவுன்ஸ் வெட்டு வெட்ட வேண்டி ஏற்படலாம் என்று. பங்கீடு திட்டம் அமுலிலிருக்கும் பகுதிகளிலெல்லாம் அரைப்பட்டினி என்ற கொடிய நிலை இதனால் ஏற்பட்டு விடும். பம்பாய், சென்னை, பீகார், வங்காளம் போன்ற மாகாணங்களின் சில பிரதேசங்களிலும், மைசூர், ஹைதராபாத், திருவாங்கூர், குவாலியர், மத்திய இந்தியா போன்ற சமஸ்தானங்களின் சில பகுதிகளிலும் உணவு நிலைமை மோசமாகி பஞ்சப்பேய் தலைவிரித்தாடும் தோற்றம் காணப்படலாம். நடைமுறை வருடத்திற்கு தேவையான உணவு சேகரிப்பு போதிய அளவுக்கு அங்கு இல்லை. பத்து வருடங்களுக்கு போதிய உணவு தானியம்தான் பம்பாய் சர்க்காரிடம் இன்று இருக்கிறது. சென்னை மாகாணத்தில் 15 லட்சம் டன் உணவு தானியம் பற்றாக் குறையாயுள்ளது. பம்பாய் சென்னை, பீகார் மாகாணங்களின் சில கிராமந்திரப் பகுதிகளில் ரேஷன் கடைகள் ஸ்டாக் இல்லாது வாரக்கணக்கில் மூடப்பட்டு கிடக்கின்றன. பஞ்சத்தால்

மரணமடைந்த செய்திகளும் பீகாரில் கிடைக்கிறது. ஒரே வார்த்தையில் சொல்லப்போனால், நாட்டின் உணவு நிலைமை படுமோசமாகி விட்டது என்பது நன்ருகத் தெரிகிறது.

இந்த வருடத்தில், நாட்டில் உணவு நெருக்கடி இப்படி முற்றி விட்டதற்கு முக்கியமானகாரணமாய் அமைந்திருப்பது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகாததே. நாடு முழுவதுக்குமாக தேவையாயுள்ள உணவுப் பொருள்களில் 45 லட்சம் டன் பற்ருக்குறை ஏற்பட்டிருக்கிறது. உலக உணவு பொருள்களை கையில் வைத்துக் கொண்டு ஏகபோக உரிமை படைத்துவிட்ட ஒரு சில தேசங்கள் அந்த உணவை தத்தம் பொருளாதார ஆதிக்க நலன்களுக்காக உபயோகித்து வருகின்றனர். சர்வதேச உணவு போர்டு ஸ்தாபனத்தில், பிரிட்டிஷ்—அமெரிக்க வல்லரசுகளின் ஆதிக்கம் இருக்கிறது. அந்த ஸ்தாபனத்திலிருந்துகொண்டு தமது ஏகாதிபத்திய நலன்களை பலப்படுத்திக் கொள்வதற்காக வேலைசெய்து வருகின்றன. அதனுல் தான் இந்தியாவில் சீரழிந்து வரும் உணவு நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தேவையான உணவுப் பொருளை இந்தியாவுக்கு கொடுத்து உதவ மறுத்து வருகிருர்கள். ஏகாதிபத்திய அதிகாரவர்க்கம் ஆட்சிபீடத்திலிருந்து வந்தபோது, எப்படி இந்த பிற்போக்கு வல்லரசுகளிடமிருந்து உணவுப்பொருள்களை வாங்குவதற்கு 'தாஜா' பண்ணி திருப்தி செய்ய பாடுபட்டதோ, அதே போக்கில் இடைக்கால சர்க்காரும் போவதைக் கண்டு கிஸான் சபை வருந்துகிறது. அந்த வல்லரசுகளின் ஏகாதிபத்திய நோக்கங்களையும், கொள்ளை லாபமடிக்கும் திட்டங்களையும் உலக ஜனநாயக நாடுகளின் முன்னே அம்பலத்திற்கிழுத்து தனது தேவைகளுக்கு இந்திய ஆதரவு தேட வேண்டும்.

உணவு நெருக்கடிக்கு அடிப்படையான காரணம் நாடெங்கும் வேருன்றியிருக்கும் நிலச்சுவான்தாரி முறையே. கிராமப் பொருளாதாரத்தின் குரல்வளையை இந்த கேடுகெட்ட நிலச்சுவான்தாரி முறை அழுத்திப்பிடித்துக் கொண்டிருப்பதால்தான் உணவுப் பொருள்களை கள்ளத்தனமாக சேமித்துவைக்கவும், கள்ளமார்க்கெட்டில் வியாபாரம் செய்யவும் வசதியளிக்கிறது. உணவை பெருக்குவதற்காக நாட்டிலுள்ள நிலவளத்தையும் நீர் வளத்தையும் இதர இயற்கைப்பொருள் வசதிகளையும் பூரணமாக பயன்படுத்துவதற்கு மிகப்பெரிய முட்டுக்கட்டையாக நிற்பதும் இந்த நிலச்சுவான்தாரிமுறையே. சாகுபடி செய்யத் தகுதியிருந்தும் வீணுய்க் கிடக்கும் நிலப்பகுதியும், தரிசாய்க்கிடக்கும் நிலங்

களும் சேர்த்து நாடெங்குமுள்ள நிலச்சுவான்தார்களின் பிடியில் மட்டும் சிக்கியிருப்பது கொஞ்சநஞ்சமல்ல, ஒன்பது கோடி ஏகராவாகும்! அதோடுகூட, உற்பத்திக்கே தீங்குசெய்கிறது இந்த நிலச்சுவான்தாரி முறை. உழுபவனுக்கே நிலம் சொந்தமில்லாதிருப்பதும், எந்த நேரத்திலாயினும் நிலத்திலிருந்து விரட்டப்படலாம் என்று ஸ்திரமில்லாத நிலையும், குத்தகையும், வாரமும் அதிகரித்துக்கொண்டுபோகும் நிலைமையும் இருந்துவந்தால், உணவு உற்பத்தியைப் பெருக்க எந்த விவசாயிக்குத்தான் உற்சாகமேற்படும்? ஆகவே தரிசாய் கிடக்கும் நிலத்தையெல்லாம் சர்க்கார் சாகுபடிக்கு உடனே கொண்டுவந்தாலொழிய, நிலபாத்தியதையை நிர்ணயம்செய்து குத்தகையைக் குறைத்தாலொழிய உணவுப் பொருளுக்கு தட்டு ஏற்படுவது நீடித்துக்கொண்டேதான் இருக்கும்; உணவு நெருக்கடியும் இருந்துகொண்டேதான் இருக்கும்.

இன்று உணவு நெருக்கடி இவ்வாறு முற்றிவிடக் காரணம், வெவ்வேறு மாகாணங்களிலுள்ள சர்க்கார்களின் கொள்முதல் திட்டம் தோல்வியடைந்து, அதன் விளைவாக கள்ளசேமிப்பாளர்களிடமும், கள்ளமார்க்கெட் வியாபாரிகளிடமும் உணவு தானியங்கள் சேர்ந்துவிட்டதுதான். கொள்முதல் திட்டங்கள் தோல்வியடைய நேரிட்டது. ஏனெனில் பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற முயற்சிக்காமல் இந்த திட்டத்தை நிறைவேற்றிவைக்க அதிகாரவர்க்கத்தையும், மொத்த வியாபாரிகளையும் முழுக்க முழுக்க நம்பிவிட்டதுதான். அதிகாரவர்க்கத்தின் கொள்முதல் இலாகாவில் ஒழுகிக் கொட்டிய லஞ்சமும், ஊழலும் சேர்ந்து கொள்முதல் காரியாதிகளை வெற்றிபெறுதபடி நாசம்செய்துவிட ஒரு மிகப் பெரிய காரணமாக இருந்தது. கள்ளசேமிப்பாளர்களின் பிடியில் உணவு தானியம் சிக்கிக்கொள்ளவும் இது காரணமாய் இருந்தது. அஸ்ஸாம், பீகார், பஞ்சாப், ஒரிஸ்ஸா, வங்காளம் ஆகிய மாகாணங்களில்,—அதாவது நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில், குறிப்பாக உபரிதானிய மாகாணங்களில்,—விவசாயிகளிடமிருந்து நேராக உபரிதானியத்தை கொள்முதல் செய்வதற்கு கட்டாயமுறையில் கொள்முதல் செய்யும் ஏகபோக உரிமையை சர்க்காரே மேற்கொள்வதற்கு திட்டங்களெதுவும் இன்னும்கூட போடப்படவில்லை.

அதற்கு நேர் எதிராக, கொள்முதல் செய்வது வியாபாரிகளிடம் விடப்பட்டிருக்கிறது. இவர்கள் என்ன செய்கிறார்கள்?

சர்க்காரால் நிர்ணயம் செய்துள்ள விலேக்கும் குறைவான விலே களில் விவசாயிகளே ஏமாற்றி ஏராளமாக தானியத்தை கொள் முதல் செய்துவிடுகின்றனர். அதோடு, இவ்வாறு வஞ்சகமா கொள்முதல் செய்துள்ள தானியம் பூராவையும் இவர்கள் சர்க்கா ருக்கு விற்றுவிடுவதும் கிடையாது. உதாரணமாக, அஸ்ஸாமி லும், ஒரிஸ்ஸாவிலும் விவசாயிகளிடம் இவர்கள் நெல் கொள் முதல் செய்தது மணு ஒன்றுக்கு ரூ. 3-8-0விருந்து ரூ. 8-8-0 விலேக்கு; ஆனல் அரிசி நிர்ணய விலேயே மணு ஒன்றுக்கு ரூ. 6-8-0தான். கட்டாய, ஏகபோகக் கொள்முதல் திட்டத்தின் மூலம் விவசாயிகளிடமிருந்து உபரி தானியத்தை கொள்முதல் செய்ய பம்பாய் சர்க்கார் திட்டமிட்டிருந்தது உண்மையே. ஆனல் பணக்கார விவசாயிகளேயும் நெருக்குவதற்கு பதிலாக, திருப்திப்படுத்தியதால் அந்தத் திட்டம் கவிழ்ந்தது. அதுமட்டு மல்ல; மத்தியதர விவசாயிகளில் தேசபக்தியுள்ள ஒரு பகுதி உற்சாகமான ஆதரவுதரத் தவறியதும் இந்த தோல்விக்கு ஒரு காரணமாகும். இது ஏன் ஏற்பட்டது? அவர்களுடைய வாழ்க் கைக்கும், வேலேக்கும் தினசரி தேவையான துணி, எண்ணெய், வெங்காயம், மிளகாய், வெல்லம், உழைபடைகள், உரம்போன்ற பொருட்களே சரசமான விலேக்கு கிடைக்குமுறையில் விலேநிர்ண யம்செய்து அவர்களுடைய கூட்டுறவு சொசைட்டிகளின்மூலம் வினியோகம் செய்வதற்கு சர்க்கார் முயற்சிக்காததே இந்த உற் சாகமின்மைக்கு காரணம். இவைகளினல் ஏற்பட்ட விளே வென்ன? கள்ளசேமிப்பு வியாபாரிகளிடமும், சில ஜமீன்தார் களிடமும், நிலச்சுவான்தார்களிடமும், பணம்படைத்த பெரிய விவசாயிகளிடமும் இன்று தானியம் சிக்கியிருக்கிறது. ஆங் காங்கே போலீஸ் அடக்குமுறை ஆட்சி தலேவிரித்தாடுவதும் இதற்கு ஒரு காரணமாகும்.

ஆகவே, பிற்போக்கு வல்லரசுகளே திருப்திசெய்ய முயற் சிக்கவேண்டாம். வெளிநாடுகளிலிருந்து தானியம் இறக்குமதி செய்ய, கழுத்தையறுக்கும் விலேகொடுத்து தானியம் வாங்கவேண் டாம் என்று இடைக்கால சர்க்காரை வேண்டிக்கொள்கிறது. அதற்கு பதிலாக பொருளாதார நிர்ப்பந்தத்தின்மூலமாகவும், ஏகாதிபத்திய நோக்கங்களே ஜனநாயக உலகின் முன்னர் அம்ப லப்படுத்துவதின்மூலமாகவும்தான் நியாயமான விலேக்கு போதிய தானியத்தை இறக்குமதி செய்யமுடியும். மேலும் பஞ்சாப், சிந்து ஆகிய உபரி மாகாணங்களே இடைக்கால சக்க்கார் பலவந்

தப்படுத்தி உபரிதானியத்தை இதர மாகாணங்களுக்கு அளிக்கும் படி செய்யவேண்டும். இவ்விரு மாகாணங்களும் பற்ருக்குறை மாகாணங்களுக்கு உதவிசெய்ய இதுவரை மறுத்துவந்துள்ளன.

விவசாயிகளிடமிருந்தே நேராக கொள்முதலுக்கான உபரி தானியத்தை கட்டாயமாகவும், ஏகபோக உரிமை கொண்டாடும் கொள்முதல் திட்டத்தை மேற்கொள்ளும்படி ஒவ்வொரு மாகாண சர்க்காரையும் அ. இ. கிசான் சபை கேட்டுக்கொள்கிறது. இந்த கொள்முதல் திட்டத்துக்கு அ. இ. கிசான் சபையின் ஆதரவையும் இதர பொதுஜன ஸ்தாபனங்களின் ஆதரவையும் பெறவேண்டு மென்று கோருகிறது. கொள்முதல் விலை நியாயமான விலையில் இருக்கவேண்டும். இதுதான் கொள்முதல் திட்டத்தில் வெற்றிக்கு அஸ்திவாரங்களாகும். பொதுஜன விரோதிகளான கள்ள சேமிப்பாளர்களிடமும் வியாபாரிகளிடமும் தானியம் சிக்காம லிருக்க வழி இது ஒன்றே.

மேலும், பொதுஜன ஒத்துழைப்பைப் பெற்று உடனே ஒவ் வொரு மாகாண பொதுஜன மந்திரிசபையும் கள்ள சேமிப்புகளை வேட்டையாடுவதில் தீவிரமாக இறங்கவேண்டும். கள்ளமார்க் கெட் கிடங்குகளில் பதுக்கப்பட்டிருக்கும் தானியம் வெளிச்சத் துக்கு வந்தாகவேண்டும், சர்க்கார் கைக்கு வந்தாகவேண்டும். அப்பொழுதுதான் எதிரே பல்லைக்காட்டி நிற்கும் கோர பஞ்சப் பேய் மறைந்தொழியும். அதேகாலத்தில் தொழில் உற்பத்தி பண்டங்களின், விவசாயிக்கு தினசரி வாழ்வுக்கு தேவையான பண்டங்களின் விலையை நிர்ணயிக்கவேண்டும். தொழிலாளிவர்க் கத்தின் ஒத்துழைப்பைக்கொண்டு கூட்டு உற்பத்தி கமிட்டிகளை அமைத்து தொழில் பண்டங்களின் உற்பத்தியைக் கண்காணிக்க வேண்டும். இந்த விலைநிர்ணயம் செய்யப்பட்ட பண்டங்களை ஜனநாயகமுறையில் நடக்கும் கூட்டுறவு சொஸைடிகளின் மூல மாகவோ ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமக் கமிட்டி களின் மூலமாகவோ வினியோகிக்கப்படவேண்டும். இப்படி செய் தால்தான் விவசாய மக்களின் அமோகமான ஆதரவைப் பெற்று கொள்முதல் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திவைக்க முடியும்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைச் சமா ளிப்பதற்கு பயன்படக்கூடிய இந்தத் திட்டங்கள் தீராத நோயாக நாட்டைக் கவ்வி அலக்கழித்துவரும் நிரந்தரமான உணவு நெருக் கடியைச் சமாளிப்பதற்கு போதுமானவையாக இல்லை. தானிய

உற்பத்தியில் ஏற்படும் பற்றுக்குறையை ஈடு செய்வதற்கு, உணவுப் பெருக்கிற்கான உடனடித் திட்டங்களை அனுசரிக்காவிட்டால் உணவு நெருக்கடியை நிரந்தரமாக தீர்க்கமுடியாது. ஆகவே கிஸான்சபை கீழ்க்கண்ட திட்டங்களை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுப்பதன்மூலம் உணவுப்பெருக்கு இயக்கம் வெற்றிபெற உதவ வேண்டுமென்று பொதுஜன மந்திரிசபைகளை நிர்ப்பந்திக்கிறது.

- சர்க்காருக்குச் சொந்தமானதும், தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமானதுமான விவசாயம் செய்வதற்குரிய தரிசாகக் கிடக்கும் நிலங்கள் ஏழை விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளிகளுக்கும் பயிரிடக் கிடைக்கவேண்டும். அந்த நிலங்களை விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமாகப் பண்படுத்துவதற்கும், சாகுபடி செய்வதற்கும் வேண்டிய பொருளாதார உதவி அளிக்கப்படவேண்டும்.

- பிரத்தியேகமாக தயாரித்து வைக்கப்பட்டுள்ள உயர்ந்த ரகமான விதை உரம், விவசாயக் கருவிகள் தேவையான சமயத்தில் விவசாயிகளுக்கு சப்ளை செய்யவேண்டும். இவற்றை வினியோகம் செய்கையில் தேவைக்கு ஏற்றவாறு விவசாயிகளின் கமிட்டி மூலம் நேரடியாக விவசாயிகளுக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

- பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைக்கொண்டு நீர்ப்பாசன வசதிகளை அதிகப்படுத்தவேண்டும்.

- நிலப் பாத்யதையை நிர்ணயித்து, தீர்வைச் சுமையை குறைப்பதற்கான சட்டம் இயற்றப்படவேண்டும்.

- வாரம் அல்லது குத்தகையை தானியமாகக் கொடுப்பதற்கு பதில் ரொக்கமாகக் கொடுக்கலாம் என்ற சட்டம் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

- போலீஸ் ஆட்சி வாபசாகவேண்டும்.

கிஸான்சபை, விவசாயிகளுக்கும், கிளை ஸ்தாபனங்களுக்கும் கீழ்க்கண்ட திட்டங்களை செயலிற் கொண்டுவர இன்றுமுதல் தீவிரமாக வேலைசெய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறது.

- தானியக் கையிருப்புகளை சேகரிப்பதில் கிராமத்திலுள்ள சர்வஜனப்பகுதியினருடைய ஒத்துழைப்பையும் பெருவதற்கான கிஸான் சபையின் ஒன்றுபட்ட சக்தி முழுவதையும் ஆதரவாகத் திரட்ட வேண்டும். கிராமத்தில் கையிருப்பில் தானியங்களை வைத்திருப்பவர்கள் தாங்களாகவே ஸ்டாக்குகளை சர்க்காரிடம் விற்பனை செய்யும்படியாகவும், அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்படிச் செய்வதும் கிஸான் சபையின் கடமையாகும்.

- கள்ளச் சேமிப்பின்மூலம் மக்கள் உணவைப் பதுக்கி வைத்திருப்பதை எதிர்த்து அகில இந்திய ரீதியில் ஓர் இயக்கம் ஆரம்பிக்கவேண்டும். வியாபாரிகள், பதுக்கல்காரர்கள், 30 ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருக்கும் மிராசுதார்கள் ஆகியோரிடமுள்ள உபரி தானிய இருப்பை அதிகாரத்துடன் பறிமுதல்செய்ய வேண்டும் என்று பொதுஜன மந்திரிசபைகளை வற்புறுத்த வேண்டும்.

- தானியக் கொள்முதல் திட்டத்தையும், உணவு வினியோக ஏற்பாட்டையும் வெற்றிகரமாக்குவதில் கிஸான் சபையுடனும் கிஸான் சபை ஊழியர்களுடனும் பொதுஜன மந்திரி சபைகள் ஒத்துழைக்க மறுப்பதை உடனே கைவிடவேண்டுமென்று கோரவேண்டும். உணவுக்கமிட்டிகளில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளாமல் விட்டுவைக்கும் மிக மோசமான பாரபட்சக் கொள்கை உடனே மறைந்தொழிய வேண்டுமென்று கோர வேண்டும்.

- வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைக் கட்டுப்பாடு விலைக்கே கிடைக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்ய வேண்டும்.

- ஜனநாயக முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் (Co-operative Societies) அமைக்க வேண்டும் என்றும் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

உணவு நெருக்கடியை தற்காலிகமாகச் சமாளிப்பதில் நாட்டுக்குத் துணைபுரியக்கூடிய இடைக்கால திட்டங்களேயாகும். நிரந்தரமாகவும் நிம்மதியாகவும் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, நிலச்சுவான்தாரி முறை ஒழிந்து உழுபவனுக்கே நிலம் கிடைக்காதவரையில் முடியவே முடியாது என்று கிஸான் சபை அபிப்பிராயம் தெரிவிக்கிறது. கூறிய பற்களினால் நாட்டு மக்க

ளைப் பதம் பார்க்க திரும்பத் திரும்ப வந்துகொண்டே இருக்கும் பஞ்சப் பேயின் உற்பத்திக்குக் காரணமே நிலச்சுவான்தாரி முறைதான். நாட்டு மக்களை புழுவாய்த் துடிக்கவைக்கும் நிரந்தரமான உணவு நெருக்கடிக்கு ஆதிகாரணம் இதுதான். விவசாய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டு, விவசாயம் பாட்டன் பூட்டன் காலத்திலிருந்த நிலைமையிலேயே இருக்கும்படிச் செய்து, உணவு உற்பத்தியை தடுத்து வருவதும் இந்த நிலச்சுவான்தாரி முறைதான்.

V211,934 (X723)
N47